*1*

# பரலோக ராஜ்யத்தின் குடிமக்கள்!

## (மத்தேயு 5:1-12)

*மத்தேயு 5-7 அதிகாரங்கள் "உலக இலக்கியத்தில் மிக உன்னதமான உரை,"[1] "அரசரின் கொள்கை விளக்க அறிவிப்பு," "ஒப்புக்கொடுத்தல் உள்ள வாழ்வு பற்றிய விபரக் கையேடு," "சபையின் மாபெரும் உரிமைப் பத்திரம்" மற்றும் "பரலோக ராஜ்யத்தின் அரசியல் அமைப்புச் சட்டம்" என்றெல்லாம் அழைக்கப்பட்டுள்ளது. நம்மில் பெரும்பான்மையானவர்கள் இதை, நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த அகஸ்டீன் என்பவரால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் சொற்றொடரைக் கொண்டு அறிகிறோம்: "மலைப் பிரசங்கம்."[2] ஆயிரமாயிரம் புத்தகங்கள், கட்டுரைகள், பிரசங்கங்கள் மற்றும் பாடங்கள் இதன் அடிப்படையில் அமைந்துள்ளன. பலர் இதை, வாழ்வு எவ்வாறு வாழப்பட வேண்டும் என்பதற்கான முற்றான சொல்விளக்கமாகக் கருதுகின்றனர்.*

*மலைப்பிரசங்கம் என்பது இயேசுவின் போதனைகள் யாவற்றிலும் நன்கு அறியப்பட்ட ஒன்றாக மாத்திரமல்ல, ஆனால் அனேகமாக மிகக்குறைவாகப் புரிந்துகொள்ளப்பட்டதும் மற்றும் ஏறக்குறைய மிகக்குறைவாகக் கீழ்ப்படியப்பட்டதுமான பகுதியாகவும் உள்ளது என்பது கவலைக்குரியது.[3] இந்தப் பிரசங்கம் பற்றிய ஒரு படிப்பை நாம் தொடங்கும் இவ்வேளையில், இந்தப் பாடத்தொடரானது இதை இன்னும் மேன்மையாகப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவ வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். இதன் கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்ப்படியும்படி இப்பாடங்கள் உங்களைத் தூண்டும் என்றுகூட நான் நம்பிக்கையாயிருக்கிறேன் (காண்க மத்தேயு 7:24-27).*

### நமது படிப்பிற்காக ஆயத்தப்படுதல்

**சில உரிமைத் துறப்புகள்**

*நாம் மத்தேயு 5:1-12க்குச் செல்வதற்கு முன்னர், பின்னணி விஷயங்கள் சிலவற்றை அளித்தல் எனக்கு அவசியமாக உள்ளது. ஒரு சில உரிமைத் துறப்புகளுடன் தொடங்க என்னை அனுமதியுங்கள். முதலாவதாக நான், மலைப்பிரசங்கம் என்ற இப்பகுதி இயேசு போதித்த எல்லாவற்றின் மொத்தமாக இருப்பதில்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். மத்தேயு 5-7 அதிகாரங்களில், வலிவார்ந்த பல தலைப்புகள் தொடப்பட்டிருக்கின்றன, ஆனால் அந்த அதிகாரங்களை நாம் தக்கவைத்துக் கொண்டு இயேசுவின் பிற போதனைகளைத் தள்ளிவிட முடியாது.*

*மலைப்பிரசங்கத்தைப் பற்றி மாத்திரமே எவரொருவரும் அக்கறையாக*

இருக்க வேண்டும் என்று சிலர் நினைப்பதாகக் காணப்படுகிறது. அவர்கள், “பிரசங்கியார்கள் ஆரவாரமாகப் பேசவிரும்புகிற அந்த முக்கியத்துவமற்ற விஷயங்களைக் குறித்து நான் கவலைப்படுவதில்லை. மலைப்பிரசங்கத்தில் கூறப்பட்டுள்ளவற்றின்படி வாழ்வதை மட்டுமே நான் நம்புகிறேன்” என்று மேலெழுந்தவாரியாகக் கூறுகின்றனர். சிலவேளைகளில் அவர்கள் “மலைப்பிரசங்கத்தின்படி வாழுதல்” என்பது ஒரு எளிய விஷயம் என்ற மனப்பதிவை விட்டுச் செல்கின்றனர். அவர்கள் அவ்வாறு செய்யும்போது நான், அவர்கள் அந்தப் பிரசங்கத்தைத் தீவிரமாக வாசித்தார்களா இல்லையா என்று வியப்படைகிறேன் (எடுத்துக்காட்டாக, 5:39ஐக் காணவும்).

நமது பாவங்களுக்காக இயேசுவின் மரணம் என்ற சுவிசேஷமாகிய நற்செய்தி, இந்தப் பிரசங்கத்தில் கூறாது விடப்பட்டுள்ளது என்பது மிகத்தெளிவு. சார்லஸ் R. எர்டுமேன் என்பவர், மலைப் பிரசங்கத்தைப் பற்றிப் பின்வரும் உட்கண்ணோக்கு நிறைந்த உற்றுநோக்கலை ஏற்படுத்தினார்:

> இது இராஜ்யத்தின் அடிப்படைச் சட்டங்களை முன் அமைக்கிறது, ஆனால் இவையன்றி, கிறிஸ்து என்ற தெய்வீக நபரின் சத்தியம் மற்றும் மீட்பின் ஊழியம் ஆகியவையும் உள்ளன, அது கேட்பவரின் இருதயத்தைத் திகைப்பினாலும் பெரும் வருத்தத்தினாலும் நிரப்பும்.

இந்தப் பிரசங்கம் மாத்திரமே நாம் பெற்றுக்கொண்ட ஒரே வேதவாக்கியமாக இருந்திருக்கும் என்றால், நாம் யாவரும் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டவர்களாக நிற்போம் - ஏனெனில் இது ஒரு தெய்வீக உயர்கொள்கையையும் நடத்தையின் பூரணத்துவமான தர அளவையையும் வெளிப்படுத்துகிறது. தெய்வீக உதவியின்றி எந்த ஒரு நபரும் இந்தத் தர அளவையை அணுகத் தொடங்க இயலாது.[4]

ஆகவே மலைப்பிரசங்கம் என்பது இயேசு போதித்த எல்லாவற்றின் மொத்தமாக இருப்பதில்லை என்பதை நான் மீண்டும் கூறுகிறேன். இது கிறிஸ்துவின் இராஜ்யத்தில் குடிமகனாக இருத்தலில் உள்ளடங்கியிருப்பது என்ன என்பதன் அற்புதமான தொகுப்புரையாக உள்ளது, ஆனால் அவரைப் பின்பற்றுபவர்கள் என்ற வகையில் நாம் அறிந்துகொள்ளத் தேவையான எல்லாவற்றையும் இது சுற்றிச் சூழ்ந்திருப்பதில்லை.

இரண்டாவதாக, *இயேசு தமது சக யூதர்களை மோசேயின் அடிப்படைச் சட்டங்களுக்குத் திரும்ப அழைத்தல் என்பது அவரது முதன்மை நோக்கமாக இருக்கவில்லை.* இந்தப் பிரசங்கம், பழைய ஏற்பாட்டின் கட்டளைகளை மீளக்கட்டுவித்தலுக்கு இயேசுவின் முயற்சி என்பதை விட சற்றே அதிகமானதாக மாத்திரம் உள்ளது என்று சிலர் வலியுறுத்துகின்றனர். இந்தப் பிரசங்கம், பழைய ஏற்பாட்டை நடப்பில் கொண்டிருந்த யூதர்களுக்குப் பிரசங்கிக்கப் பட்டது என்பது உண்மையாகவே உள்ளது.[5] ஆகவே இதற்குள் பழைய ஏற்பாட்டின் மேற்கோள்களையும் (காண்க 5:21) பலிபீடத்திற்கு ஒரு காணிக்கையைக் கொண்டுவருதல் (வசனங்கள் 23, 24)[6] போன்ற பழைய ஏற்பாட்டின் நடைமுறைகளுக்கான குறிப்புகளையும் கண்டறிவதில் நாம் திகைப்படைவதில்லை. இருப்பினும், இயேசு கடந்தகாலத்தைப் புறக்கணிக்கவில்லை என்றாலும், அவர் எதிர்காலத்திற்கு ஒரு புதிய வழியைத் தொடங்கி வைத்துக் கொண்டிருந்தார் என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

*5ம் அதிகாரம் முழுவதையும் வாசித்துப் பார்த்து, அவர் "... என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ..." என்றோ அல்லது அந்தச் செயல்விளைவை ஏற்படுத்தும் வார்த்தைகளையோ எத்தனை முறை கூறினார் என்பதைக் கவனியுங்கள் (வசனங்கள் 21, 22, 27, 28, 33, 34, 38, 39, 43, 44). இயேசு, மோசேயின் அதிகாரத்துவத்திற்கு அல்ல, ஆனால் தமது சொந்த அதிகாரத்திற்கு வேண்டுகோள் விடுத்தார் (காண்க 7:28, 29).*

*மூன்றாவதாக (மற்றும் ஒருவேளை மிக முக்கியமாக), மலைப்பிரசங்கம் சாத்தியமற்ற ஒரு இலக்கை முன்வைப்பதில்லை. இந்தப் பிரசங்கத்தின் கருத்துக்களை நடைமுறைப்படுத்த "ஏன் முயற்சி செய்ய வேண்டும்?" என்ற மறைமுகக் கருத்துடன் சிலர் இதை, அடைய இயலாத ஒரு உயர்கொள்கை என்று தள்ளிவிட்டுள்ளனர். மற்றவர்கள், இந்தப் பிரசங்கத்தின் வேண்டுகோள்கள் இருபத்தியோராம் நூற்றாண்டின் மக்களுக்கு நடைமுறைப்படுத்தப் படவேண்டும் என்று இயேசு ஒருக்காலும் நோக்கங் கொண்டிருந்ததில்லை என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். அவர்கள், இயேசுவின் அடிப்படைவாத அறிவுறுத்துதல்கள் அவரது நாட்களில் இருந்த சீஷர்களை, அவர் விரைவில் நிலைநாட்டவிருந்த பூமிக்குரிய ஒரு இராஜ்யத்திற்கென்று ஆயத்தப்படுத்தும்படியே முற்றிலுமாக இயக்கப்பட்டிருந்தது என்று கூறுகின்றனர். அப்படிப்பட்ட கருத்தானது (கிறிஸ்துவைத் தேவனுடைய திட்டங்கள் பற்றி அறியாதவர் என்று முன்னிறுத்துவதால்) கிறிஸ்துவுக்கும் வசனத்தை ஏவிய பரிசுத்த ஆவிக்கும் அவமானத்தைக் கொண்டுவருவதாக உள்ளது (ஏனெனில் இது அவரது வெளிப்படுத்துதல் எல்லா யுகங்களுக்கும் உரியதல்ல என்று மறைமுகமாகக் குறிப்பிடுகிறது).*

*மலைப்பிரசங்கத்தில் காணப்படுகிற பல கொள்கைகள் அன்றாட வாழ்வில் பின்பற்றக் கடினமானவையாக உள்ளன என்பது ஒப்புக்கொள்ளப்படக் கூடியதாகும். இந்தப் பிரசங்கத்தின் தர அளவையில் நான் குறைவுபடுவதை ஒப்புக்கொள்கிறேன். கிறிஸ்துவின் நிபந்தனைகள் பலவற்றுடன் நான் போராடுகிறேன் மற்றும் பூமியின்மீது எனது வாழ்வின் முடிவு வரையிலும்கூட இவ்வாறு போராடுபவனாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கிறேன். இது, இந்தப் பிரசங்கத்தின் நிபந்தனைகள் சாத்தியமற்றவையாக உள்ளன என்றோ அல்லது இதன் தர அளவைகளுக்கு ஏற்றாற்போல் வாழ்வதற்கு நம்மால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பாகச் செயல்படக்கூடாது என்றோ கூறுவது போன்றதாக இராது. மலைப்பிரசங்கத்தின் கொள்கைகளை நாம் "நீர்த்துப்போகச் செய்யும்" போது, நமது உரையைக் கேட்பவர்களுக்கு நாம் அநீதியிழைப்பவர்களாக இருக்கிறோம். மத்தேயு 5-7 அதிகாரங்களைக் குறித்து* G. K *செஸ்ட்டர்ட்டன் என்பவர் எழுதிய பின்வரும் குறிப்புரைகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்:*

> *... முதன்முறை இதை வாசிக்கும்போது நீங்கள், இது எல்லாவற்றையும் தலைகீழாகத் திருப்புகிறது என்று உணருவீர்கள், ஆனால் இரண்டாம் முறை இதை வாசிக்கும்போது நீங்கள், இது எல்லாவற்றையும் சரியாகத் திருப்புவதைக் கண்டறிவீர்கள். முதன்முறை இதை வாசிக்கும்போது நீங்கள், இது சாத்தியமற்றது என்று உணருவீர்கள், ஆனால் இரண்டாம் முறை இதை வாசிக்கும்போது நீங்கள், இதைத் தவிர வேறு எதுவும்*

சாத்தியமானதல்ல என்று உணருவீர்கள்.[7]

இந்தப் பாடங்களின் தொடரில், மலைப்பிரசங்கத்தில் வரைகுறிப்பிடப் பட்டுள்ள நிபந்தனைகளைச் சந்திக்க நம்மால் இயன்ற அளவிற்குச் சிறப்பாக நாம் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும் என்பது அறைகூவலாக இருக்கும். அதைச் செய்கையில் நாம், தேவனிடத்தில் நாம் இருக்க வேண்டியபடி இருப்பதற்கும் செய்ய வேண்டியவற்றைச் செய்வதற்கும் பலத்தையும் தைரியத்தையும் கேட்க வேண்டும். பின்பு, நம்மால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பாகச் செயல்பட்டுள்ள பின்பும் இன்னும் குறைவுபட்டிருக்கையில், நாம் தேவனுடைய கிருபை மற்றும் இரக்கத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

**கலந்துரையாடல்**

மற்ற முதன்மை விஷயங்கள் கலந்துரையாடப்பட முடியும். எடுத்துக்காட்டாக, மத்தேயு 5-7 அதிகாரங்களில் காணப்படுகிற மலைப்பிரசங்கமும் லூக்கா 6ம் அதிகாரத்தில் உள்ள சமனான இடத்தில் செய்யப்பட்ட பிரசங்கமும் ஒரே பிரசங்கம்தானா என்று சிலர் வியப்படைகின்றனர். பல ஆண்டுகளுக்கு முன்பு, பெரும்பான்மையானவர்கள் இவையிரண்டும் தனித்தனியான மற்றும் தனிச்சிறப்பான பிரசங்கங்களாக இருந்தன என்று நம்பினர். இன்றைய நாட்களில் இவை இரண்டும் ஒரே பிரசங்கத்தின் இரு விபரங்கள் என்று கூறக் கேட்பது மிகவும் பொதுவானதாக உள்ளது. இது நாம் தீர்த்து வைக்கக் கூடிய கேள்வியல்ல, மற்றும் இதை நாம் தீர்த்து வைக்க வேண்டும் என்பது முக்கியமானதுமல்ல. இவை இரண்டும் ஒரே பிரசங்கமாக இருந்தாலும் இல்லை என்றாலும், இவை இரண்டையும் பயன்தரும் வகையில் நாம் ஒப்பிடுமளவுக்கு, இரண்டிற்கும் இடையில் ஒற்றுமைகள் உள்ளன. மத்தேயு சுவிசேஷ விபரத்தின் மீது நமது கவனக்குவிப்பு இருக்கும், ஆனால் அவ்வப்போது நான் லூக்கா சுவிசேஷ விபரத்தைக் குறிப்பிடுவேன்.

பின்னணியைப் பற்றிக் குறைந்தது இன்னும் ஒரு விஷயம் கூறப்பட வேண்டும். இந்தப் பாடங்களைத் தயாரிப்பதில் நான், இயேசுவின் வார்த்தைகள் தங்களுக்காகப் பேசுவதை அனுமதிப்பதற்குப் பதிலாக, வசனப்பகுதியை மிகவும் அதிகமாக நுண்ணாய்வு செய்தலின் அபாயத்தை அறிந்திருந்தேன். ஒரு மலரைப் பறித்து அதன் ஒவ்வொரு இதழையும் ஆய்வு செய்தல் என்பது அந்த மலரை அழித்து அதன் அழகைக் சேதப்படுத்துகிறது. வசனப்பகுதியை நான் ஆராய்வேன், ஆனால் எனது குறிப்புரைகள் இயேசுவின் வார்த்தைகளில் இருந்து பாதை விலகாதிருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். அவைகள் வேத வசனத்தின் அழகும் வல்லமையும் தெளிவாய்த் தெரியும்படி, அவற்றின் மீது வெளிச்சம் காட்டும் என்று நான் நம்பிக்கையாக இருக்கிறேன். இந்த அதிகாரங்களின் மீது கூறப்படக் கூடிய எல்லாவற்றையும் கூற நான் எந்த முயற்சியும் மேற்கொள்ள மாட்டேன். மலைப்பிரசங்கம் பற்றிப் பிறர் எழுதியுள்ளவற்றில் இருந்து நான் வேறு எதையும் கற்றுக்கொள்ளாது இருந்தாலும் பின்வருவதைக் கற்றுக்கொண்டுள்ளேன்: இணையற்ற இந்த உரையைப்பற்றிக் கூறுவதற்கு, அதிகமான சில விஷயங்கள் எப்போதுமே இருக்கின்றன.

இப்போதைக்கு அது போதுமான முதன்மைத் தகவலாக உள்ளது. மத்தேயு 5ன் முதல் சில வசனங்களை நாம் கண்ணோக்குகையில் தொடர்புடைய விஷயங்கள் எடுத்துரைக்கப்படும்.

## *பிரசங்கத்திற்கு ஆயத்தப்படுதல் (5:1, 2)*

***காட்சி அமைவு***

*மத்தேயு 5ம் அதிகாரம் பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குகிறது: "அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்" (வசனம் 1அ, ஆ). இயேசுவினால் காணப்பட்ட திரளான ஜனங்கள் முந்திய அதிகாரத்தின் கடைசி வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர்: "கலிலேயாவிலும், தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள்" (4:25).*

*இயேசு இந்த பூமியில் செய்த ஊழியத்தின் மத்திய பாகத்தில் ஒன்றரை ஆண்டுகாலமாகச் செய்ததும், "மாபெரும் கலிலேய ஊழியம்" என்று அழைக்கப்பட்டுள்ளதுமான ஊழியத்தின் தொடக்கம் பற்றி நாம், மத்தேயு 4ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இயேசு யூதேயா பகுதியில் பிரசங்கித்திருந்தார் (காண்க யோவான் 3:22-24), ஆனால் அவர் "ஏரோது ... யோவான் ஸ்நானனைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருந்தான்" என்று கேள்விப்பட்டபோது [காண்க மத்தேயு 14:3], அவர் "கலிலேயாவுக்குப் போய்" அங்கே தங்கியிருந்தார் (மத்தேயு 4:12). இயேசு தமது வாழ்வின் முதல் முப்பது ஆண்டுகளைக் கலிலேயாவில்தான் செலவிட்டிருந்தார். அவர் அந்த மாகாணத்திற்குத் திரும்பி வந்தபின்பு, அவர் முழு நேர சீஷத்துவத்திற்காக மனிதர்களை அழைத்தார் (வசனங்கள் 18-22). அவர் "கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்" (வசனம் 23). "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்பதே (வசனம் 17) அவரது இராஜ்யத்தின் செய்தியினுடைய இருதயம் போன்ற மையப்பகுதியாக இருந்தது. விரைவிலேயே "திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள்" (வசனம் 25அ). இந்தக் கூட்டத்தைக் கண்ட இயேசு, "மலையின்மேல் ஏறினார்" (5:1ஆ). ஒருவேளை அவர், கூட்டத்தில் இருந்து விலகிச்செல்ல விரும்பி இருக்கலாம், அல்லது ஒருவேளை அவர் தமது உரையைக் கேட்பவர்கள் நன்கு காணக்கூடிய இடத்தை விரும்பியிருக்கலாம்.*

*கர்த்தர் "மேல் ஏறிச்சென்றது" எந்த "மலை" என்று நாம் அறிவதில்லை. ஹேட்டின்னின் ஹார்ன்ஸ் என்பது பாரம்பரியமாகச் சுட்டிக்காண்பிக்கப்படும் இடமாக உள்ளது, ஆனால் இதுவே அந்த இடம் என்று நாம் நிச்சயமாய் கூற இயலாது. "மலை" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*oros*; என்ற) சொல் "குன்று" என்றும் அர்த்தப்படக்கூடும். (இதே கிரேக்க வார்த்தை 5:14லிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது, அது "மலையின்மேல் இருக்கிற பட்டணம்" என்பதைப் பற்றிப் பேசுகிறது.) "மலை" என்பதற்கு முன்னால் உள்ள ("*the*" என்ற) திட்டவட்டமான சுட்டுச்சொல் ஒரு குறிப்பிட்ட அல்லது நன்கு அறியப்பட்ட மலையைக் குறிப்பிட வேண்டும் என்று அவசியமில்லை. ஜோசப் H. தாயெர் என்பவரின் அகராதியின்படி, இந்தச் சொல்லாக்கம் "பேசப்பட்ட இடத்திற்கு அருகில் உள்ள, அருகாமையில் உள்ள மலை" என்பதை மாத்திரம் சுட்டிக்காண்பிப்பதாக உள்ளது.[8] அநேகமாக இந்தப் பிரசங்கம், கலிலேயாக் கடலின் மேற்குப் பகுதியில் கூர்மையாக உயர்ந்த முரடான உயர்ந்த பகுதிகளில்*

ஏதோ ஒரு இடத்தில் பிரசங்கிக்கப்பட்டிருக்கலாம்.

நமது வேதவசனப் பகுதிக்குத் திரும்புகையில் நாம், ''அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள்'' என்று வாசிக்கிறோம் (வசனம் 1இ, ஈ). அமருதல் என்பது, முறைசார்ந்த போதனைக்கு வழக்கமான உடல்அமைவுத் தோற்றமாக இருந்தது (காண்க 13:2; 23:2; 24:3; 26:55). யூதருடைய ஜெப ஆலயங்களில், போதகர் அமர்ந்திருந்தார் (காண்க லூக்கா 4:20). வேதவசனம், "அவருடைய *சீஷர்கள்* அவரிடத்தில் வந்தார்கள்" என்று கூறுவதைக் கவனியுங்கள்.[9] அடுத்த வசனம், அவர் "*அவர்களுக்கு* உபதேசிக்கத் தொடங்கினார்" என்று கூறுகிறது. லூக்கா சுவிசேஷ விபரத்தின்படி, இயேசு இந்தப் பிரசங்கத்திற்குச் சற்று முன்னர்தான் பன்னிரு அப்போஸ்தலர்களைத் தேர்ந்துகொண்டார் (காண்க லூக்கா 6:12-16). விஷயம் அப்படி உள்ளது என்றால், இந்தப் பிரசங்கம் "புதிதாக நியமிக்கப்பட்ட அப்போஸ்தலர்களுக்குப் பயிற்றுவிக்கும் பாடவேளையாக" நினைக்கப்படலாம்.[10] இருப்பினும், இந்தப் பன்னிருவர் அல்லாமல் இயேசு மற்ற சீஷர்களையும் கொண்டிருந்தார் (காண்க லூக்கா 10:1). கற்றுக்கொள்வதற்காகப் போதகர் ஒருவரைப் பின்பற்றியவரே ஒரு சீஷராக இருந்தார். மத்தேயு 5:1ன் சீஷர்கள் தங்களை ஓரளவிற்கு இயேசுவுடன் பிணைத்துக் கொண்டவர்களாக இருந்திருக்க வேண்டும். அவர்கள் தீவிரமான மாணவர்களாக இருந்தனர்.

ஒரு கருத்தில், மலைப்பிரசங்கம் ஒவ்வொருவருக்குமானதாக உள்ளது, ஏனெனில் எல்லாரும் இயேசுவின் சீஷர்களாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். பிரசங்கத்தின் முடிவில் நாம், இயேசு போதித்தபோது மக்கள் கூட்டம் அங்கு இருந்தது என்று அறிகிறோம் (காண்க 7:28-8:1). இருப்பினும் முழுமையான கருத்தில், இயேசுவின் சீஷர்களாக இருப்பவர்கள் மாத்திரமே இந்தப் பிரசங்கத்தின் கொள்கைகளைப் புரிந்துகொண்டு, ஏற்றுக்கொண்டு, பின்பற்ற முடியும். வேறொரு இடத்தில் இயேசு, "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று குறிப்பிட்டார் (யோவான் 15:5).

காட்சி அமைவைச் சிந்தனையில் பெற்றுக்கொள்ளுங்கள்.[11] இயேசு அமர்வதற்கு ஏற்ற இடம் ஒன்றைக் கண்டறிந்தார். பின்பு அவரது சீஷர்கள் (கற்றுக்கொள்ளுதலில் தீவிரமாயிருந்தவர்கள்) அவரைச் சுற்றிலும் அமர்ந்தனர். நிறைவாக, சீஷர்களுக்குப் பின்னால், ஒப்புக்கொடுத்தலைக் காட்டிலும் புதியதைக் தெரிந்துகொள்ளும் ஆர்வம் அதிகமாகக் கொண்ட மக்கள் கூட்டம் இருந்தது. அந்தக் கூட்டமானது இயேசு பேசியபோது வளரத் தொடர்ந்தது.

**பேசுதல்**

பின்பு இவ்வசனப் பகுதி, ''அப்பொழுது அவர் [இயேசு] தமது வாயைத்திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது ...'' என்று கூறுகிறது (மத்தேயு 5:2). "அவர் தமது வாயைத்திறந்து" என்ற சொற்றொடர் "அவர் பேசக்கூடும்படித் தமது வாயைத்திறந்தார்'' என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றை அர்த்தப்படுத்துகிறது. இந்தச் சொற்றொடர் "பேசப்பட்ட வார்த்தைகள் தற்செயலான உச்சரிப்பாக இருக்கவில்லை, ஆனால் அமைவுபெற்ற மனவிருப்பமும் நோக்கமும் கொண்டிருந்தன என்று கூட்டிக் காண்பிக்கும் எபிரெய இயமாக [எபிரெயச் சொல்விளக்கமாக]'' இருந்தது.[12] இயேசு "பின்வருபவற்றைக் கூறி அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார்" - மற்றும்

அவரது நிபுணத்துவம் நிறைந்த உரையானது பெருகி ஓடியது.

இயேசு, விரைவில் நிலைநாட்டப்பட இருந்த தமது இராஜ்யத்தைக் குறித்து இதற்கு முன்பும் போதித்திருந்தார்:

> அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார் (4:17).

> பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ... (4:23).

இராஜ்யம் பற்றிய தலைப்பு மத்தேயு 5-7 அதிகாரங்களில் இயேசுவினுடைய போதனையின் மையக் கருத்தாகத் தொடர்ந்திருந்தது. இந்தப் பிரசங்கத்தில் "இராஜ்யம்" என்ற வார்த்தை எவ்வளவு அடிக்கடி தோன்றுகிறது என்பதைக் கவனியுங்கள் (5:3, 10, 19, 20; 6:10, 13, 33; 7:21). விசேஷமாக அந்தக் குறிப்புகள் ஒவ்வொன்றின் சந்தர்ப்பப்பொருளைக் கவனியுங்கள். நாம் இந்தப் பிரசங்கத்தைப் படிக்கையில், இராஜ்யத்தின் (உலகப் பிரகாரமானதல்ல, ஆனால் ஆவிக்குரிய) இயல்பையும் அரசர் நிபந்தனை விதிக்கும் ஒப்புக் கொடுத்தலின் வகையையும் (முழுமையானது) கற்றறிவோம். எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்துவின் இராஜ்யத்தில் உள்ள குடியுரிமைத்துவம் எதை மரபுரிமை ஆக்குகிறது என்பதை நாம் கற்றறிவோம்: பரலோக ராஜ்யத்தின் குடிமகன் யார்? மற்றும் அவர் என்ன செய்கிறார்?

மத்தேயு 5:1, 2ஐத் தொடர்ந்து வருவது ஒரு பிரசங்கம் அல்ல, ஆனால் மத்தேயுவினால் சேகரிக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட, இயேசுவினுடைய போதனைகளின் திரட்டு என்று சில எழுத்தாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். மத்தேயு சுவிசேஷ விபரத்தை நாம் ஏற்றுக்கொண்டால், அந்த முடிவை அடைவதற்குக் காரணம் எதுவும் இருப்பதில்லை. "மத்தேயு இந்தப் பிரசங்கத்தை, ஒரு குறிப்பிட்ட காலத்தில் மற்றும் இடத்தில் நடந்த ஒரு குறிப்பிட்ட உரையாக முன்னிறுத்துகிறார்" (காண்க 5:1; 8:1).[13] இருப்பினும் பிரசங்கத்தின் ஒரு சுருக்கமான பதிப்பை நாம் கொண்டிருக்கிறோம் என்பது அனேகமாக உண்மையாயிருக்கலாம். (இதன் இப்போதைய வடிவமைப்பில், இதை உரக்க வாசிப்பதற்கு பத்து முதல் பதினைந்து நிமிடங்களே தேவைப்படுகிறது.) அவ்வப்போது இயேசு சற்றே இடைவெளி எடுத்துக்கொண்டு அவரது போதனை சற்றே விரிவான கால அளவில் தரப்பட்டிருக்கவும் சாத்தியக் கூறு உள்ளது. சிலர் மத்தேயு 5-7 அதிகாரங்களை, "குன்றின் மீது போதனை" என்று அழைப்பதை விரும்பித் தேர்ந்துகொள்கின்றனர்.[14] மத்தேயு சுவிசேஷத்தின் இந்த மூன்று அதிகாரங்களும் இயேசு தமது சீஷர்களுக்குப் போதித்த, மக்கள் கூட்டத்தால் கேள்விப்படப்பட்ட மற்றும் நிறைவாக அவருக்குத் தங்கள் வாழ்வை ஒப்புவிக்க மனவிருப்பம் கொண்டுள்ள யாவருக்கும் போதித்தல் என்ற நோக்கம் கொண்ட உண்மையான பிரசங்கமாக உள்ளது என்று நான் நம்புகிறேன்.

## குடியுரிமைக்கு ஆயத்தப்படுதல் (5:3-12)

இந்த அறிமுகப் பாடத்தின் எஞ்சிய பகுதியில், இந்தப் பிரசங்கத்தின் முதல்

பகுதியான பாக்கியங்கள் என்பதைக் கண்ணோக்குவதன் மூலம் நாம், நமக்கு இதில் உள்ளது என்ன என்பதைப் பற்றி மாதிரி பார்ப்போம்:[15]

> "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.
>
> "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.
>
> "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.
>
> "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.
>
> "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.
>
> "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.
>
> "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.
>
> "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.
>
> "என்னிமித்தம் உங்களை நிந்தித்துக் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல் வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (5:3-12).

எட்டு பாக்கியங்கள் உள்ளன. பயன்படுத்தப்பட்ட சொல்விளக்கத்தின் வடிவம் ("*Blessed are/is*") வேதாகமத்திற்குப் பொதுவானதாகவே உள்ளது,[16] ஆனால் வேதவசனங்களில் வேறு எங்கும் நாம், "இங்கு இருப்பதைப் போன்று மிக நீண்ட மற்றும் கவனத்துடன் கட்டமைக்கப்பட்ட தொடரை" காண்பதில்லை.[17]

எட்டாவது பாக்கியம் விரிவாக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை இப்போதைக்குக் காணாது விடும்போது, ஒவ்வொரு பாக்கியத்திலும் மூன்று பாகங்கள் உள்ளன: ஒரு பண்பு, ஒரு ஆசீர்வாதம் மற்றும் ஒரு பலன். எடுத்துக்காட்டாக, முதல் பாக்கியம், பரலோக ராஜ்யத்தின் குடிமக்கள் கொண்டிருக்க வேண்டிய ஒரு பண்புடன் தொடங்குகிறது: "ஆவியில் எளிமையுள்ளவர்கள்." பின்பு இது ஒரு ஆசீர்வாதத்தைக் கொண்டுள்ளது: "பாக்கியவான்கள்"; இது ஒரு பலனுடன் முடிகிறது: "பரலோகராஜ்யம் அவர்களுடையது." சுருக்கமான இந்த மேற்கண்ணோட்டத்தில் நாம், பாக்கியங்களின் மூன்று பாகங்களை வரிசை முறையில் கண்ணோக்கி ஆராய்ச்சி செய்வோம்.

### பாக்கியங்கள்

நாம் ஆசீர்வதிக்கப்பட்டும் சந்தோஷமாகவும் இருக்கவேண்டும் என்றால்

நாம் கொண்டிருக்க வேண்டிய ஆளுமைப் பண்புகள் யாவை?[18]

- நமது ஆவிக்குரிய ஏழ்மைநிலையைப் பற்றி அறிந்தவர்களாக நாம் "ஆவியில் எளிமை உள்ளவர்களாக" இருப்பது அவசியம்.
- நமது ஆவிக்குரிய வகையிலான கைவிடப்பட்ட நிலைபற்றி நாம் "துயரப்படுவது" அவசியம்.
- நாம் தேவன் மற்றும் அவரது வசனத்திற்கு இணங்க மனவிருப்பம் கொண்டவர்களாக தாழ்மையும் "சாந்தமும்" கொண்டிருத்தல் அவசியம்.
- நாம் "நீதியினிமித்தம் பசி தாகமுள்ளவர்களாக" கர்த்தரால் நீதிமான் என்று அழைக்கப்படுவதற்கு மூழ்கடிக்கும் விருப்பம் கொண்டவர்களாக இருப்பது அவசியம்.
- நாம் நம்மைப் பற்றிக் கொண்டுள்ளதை விட மற்றவர்களைப் பற்றி அதிக அக்கறை கொண்டு "இரக்கமுள்ளவர்களாக" இருத்தல் அவசியம்.
- நாம் தூய்மையும் சுத்தமும் தேவனுடைய விஷயங்கள் மீது கவனக்குவிப்பும் கொண்ட இருதயங்களுடன், "இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக" இருத்தல் அவசியம்.
- நாம் மற்றவர்களுடனும் தேவனுடனும் சமாதானமாயிருத்தலைச் செயல் முனைப்புடன் நாடும் "சமாதானம் பண்ணுகிறவர்களாக" இருத்தல் அவசியம்.
- நாம் "நீதியினிமித்தம் துன்புறுத்தப்படும்" போது நாம் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாக நிலைத்திருத்தல் அவசியம்.

மலைப் பிரசங்கத்தின் தொடக்கம் முதல் முடிவு வரையிலும், இயேசுவின் இராஜ்யத்தில் உள்ள குடிமக்கள் சாத்தானின் இராஜ்யத்தில் உள்ளவர்களில் இருந்து வேறுபட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை இயேசு தெளிவாக்கினார். மத்தேயு 6:8ல் இந்தப் பிரசங்கத்தின் திறவுகோல் சிந்தனை இருப்பதாக கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது: "அவர்களைப்போல் நீங்கள் செய்யாதிருங்கள் ...[19]" ஜான் R. W. ஸ்டாட் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> கிறிஸ்தவர்களின் மற்றும் கிறிஸ்தவரல்லாதவர்களின் தர அளவைகளுக்கு இடையிலான இந்த நேர்மாறு தரவழைக்கப்படாத ஒரே ஒரு பத்திகூட மலைப்பிரசங்கத்தில் இருப்பதில்லை. ... இங்கு கிறிஸ்தவரின் மதிப்பீட்டு முறைமை, ஒழுக்கத் தரஅளவை, மத ஒப்புக்கொடுத்தல், பணம் பற்றிய எண்ணப்போக்கு, பேராவல், வாழ்வு முறை மற்றும் உறவுகளின் வலைப்பின்னல் - இவையாவும் கிறிஸ்தவரல்லாதவர்கள் உலகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளது.[20]

இந்த நேர்மாறாக கருத்து பாக்கியங்கள் தவிர வேறு எவ்விடத்திலும் அதிக தெளிவாகக் காணப்படுவதில்லை.[21] இயேசு, "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, "செல்வமும் மனமேட்டிமையும் கொண்டவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறுகிறது. இயேசு "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, துயரப்படக் காரணமில்லாதவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறுகிறது. இயேசு,

"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, "தங்கள் மனவிருப்பத்தைப் பிறர் மீது திணிக்கும் பலமும் வல்லமையும் நிறைந்தவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறுகிறது. இயேசு, "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, "இந்த வாழ்வு தங்களுக்குத் தரக்கூடிய எல்லாவற்றிற்காகவும் கடுமையாகப் போராடுவதில் தங்கள் வாழ்வைச் செலவழிப்பவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறுகிறது. இயேசு "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, "தாங்கள் தவறாக நடத்தப்படுவதாக நினைக்கும்போது பழிவாங்கக் கூடியவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறுகிறது. இயேசு, "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, "ஒருவரின் சுயவிருப்பமே எல்லாவற்றிலும் முக்கியமானது, சுத்தமாயிருத்தல் இனியும் பொருட்படுத்தப்பட வேண்டியதில்லை என்று நினைப்பவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறுகிறது. இயேசு "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, "சண்டையிட்டு - வெற்றிபெறுபவர்கள் பாக்கியவான்கள்!" என்று கூறுகிறது. இயேசு, "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார். இந்த உலகமானது, "துன்புறுத்தப்படுதலைத் தவிர்ப்பவர்கள் பாக்கியவான்கள், மற்றும் விசேஷமாக துன்புறுத்துபவர்களாக இருக்கப் போதிய அளவு பலம் கொண்டவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறுகிறது.

**பண்புகள்**

"பாக்கியவான்கள்" என்ற வார்த்தை, "ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்" அல்லது "மகிழ்ச்சியானவர்கள்" என்று அர்த்தப்படுகிற (*makarios* என்ற) கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது, "பாராட்டப்படக் கூடியவராக இருக்கிற ஒருவரை, வாழ்வில் பொறாமைகொள்ளக் கூடிய நிலையில் உள்ள ஒருவரை அறிமுகப்படுத்துகிறது."[22] சிலர், தேவன் தமது பிள்ளைகள் மகிழ்ச்சியாக இருப்பதை விரும்புவதில்லை என்று கூறுகின்றனர். ஆனால் இது சாத்தானுடைய பொய்யாக இருக்கிறது. தேவன் தொடக்ககாலத் தம்பதியரை, எலிகளின் தொந்தரவு உள்ள சேறிப்பகுதியிலோ அல்லது வியாதி சுமந்த சேற்றுப் பகுதியிலோ வைக்கவில்லை, ஆனால் அவர்களை அவர் பரதீசில் வைத்தார். (பாவமே இந்த உலகத்திற்கு வருத்தத்தையும் இருதய வேதனையையும் கொண்டுவந்தது.) *Makarios* என்பதை - இந்த உலகமானது "மகிழ்ச்சி" என்பதை மேலோட்டமாக விவரிக்கும் வகையில் விவரிக்காத வரையில் - நாம் "மகிழ்ச்சி"[23] என்று சட்டபூர்வமாக மொழிபெயர்க்க முடியும். ரால்ஃப் ஸ்வீட் என்பவர், மகிழ்ச்சியைக் கண்டறிய முயற்சிப்பதற்கு இரு வழிகள் உள்ளன என்று குறிப்பிட்டார்.[24] அவற்றில் முதலாவது வழி, ஒருவரின் எல்லா விருப்பங்களையும் திருப்தி செய்யும் ஒரு சூழ்நிலையை மேம்படுத்த முயற்சித்தலாக உள்ளது. அது இந்த உலகத்தின் வழியாக உள்ளது, அது தோல்விக்கென்று அழிவாக நியமிக்கப்பட்ட வழியாக உள்ளது. இரண்டாவது வழி, எந்த சூழ்நிலையிலும் ஒரு தனிநபர் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஏற்றவகையில் அவரது ஆளுமைத்தன்மையின் பண்புகளை மேம்படுத்தும் வழியாக உள்ளது. அதுவே பாக்கியங்களின் அணுகுமுறையாக உள்ளது.

*பலன்கள்*

பாக்கியங்கள் ஒவ்வொன்றும் முன்னெதிர் நோக்கப்படும் பலன் ஒன்றுடன் முடிகிறது. கிறிஸ்துவின் இராஜ்யத்தில் உண்மையாய் நிலைத்திருக்கும் குடிமகன்கள் பின்வரும் வாக்குத்தத்தங்களைக் கொண்டுள்ளனர்:

- "பரலோகராஜ்யம் அவர்களுடையது."
- "அவர்கள் ஆறுதலடைவார்கள்."
- "அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்."
- "அவர்கள் திருப்தியடைவார்கள்."
- "அவர்கள் இரக்கம் பெறுவார்கள்."
- "அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்."
- "அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்."
- "பரலோகராஜ்யம் அவர்களுடையது"; "பரலோகத்தில் அவர்கள் பலன் மிகுதியாயிருக்கும்."

பலன்களில் சில இந்த வாழ்வின் மீது கவனம் குவிப்பவைகளாகக் காணப்படுகையில், மற்றவை இனிவரும் வாழ்வின் மீது அதிகம் இலக்குடையவைகளாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு பாக்கியமும் இங்கு ஒருபகுதி நிறைவேற்றமும் இனிவரும் வாழ்வில் முழுமையான நிறைவேற்றமும் கொண்டுள்ளது என்று கருத்துத் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள். ராபர்ட் H. மௌன்ஸ் என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> *பாக்கியங்கள் ஒவ்வொன்றின் நிறைவான சொல்விளக்கமும் கடைசி நியாயத்தீர்ப்பிற்காகக் காத்திருந்தாலும், பாக்கியங்கள் தங்களிலேயே, இந்த நிகழ்காலத்தில் அனுபவிக்கப்பட வேண்டியவையாக மற்றும் மகிழ்வுடன் அனுபவிக்கப்பட வேண்டியவையாக உள்ளன. 4-9 வசனங்களில் உள்ள எதிர்கால வினைச் சொல்லானது, காத்திருக்கும் அவசியமான காலவேளைக்கு மாறாக நிச்சயத்துவத்தை வலியுறுத்துகிறது.*[25]

இப்போது ஒரு பகுதி நிறைவேற்றம் மற்றும் பிற்பாடு முழுமையான நிறைவேற்றம் என்பவை பரஸ்பரம் தனித்தனியான கருத்துக்கள் என்று நினைக்காதீர்கள், ஆனால் இவைகள் ஒரே ஆசீர்வாதத்தின் இரு பகுதிகளாக உள்ளன. வாழ்நாள் முழுவதிலும் நீங்கள் ஒரு அழகிய இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று ஏங்கியிருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். நீங்கள் அந்தப் பகுதியின் படங்களைப் பார்த்து, அங்கு செல்ல வேண்டும் என்று கனவு கண்டிருக்கிறீர்கள். கடைசியில் அந்தப் பயணத்தை மேற்கொள்ள நீங்கள் உங்கள் மனதை தயார்செய்கிறீர்கள். நீங்கள் பயணம் செல்லும் வழியில், உங்களைச் சுற்றிலும் உள்ள நாட்டுப்புறப் பகுதிகள் அதிகம் அதிகமாக நேசிக்கப்படக் கூடியதாகிறது, அவைகள் நீங்கள் முன்னெதிர் பார்த்திருந்ததைப் போன்றே அதிகம் அதிகமாக உள்ளது. கடைசியாக நீங்கள் ஒரு மூலைக்குத் திரும்புகிறீர்கள் - அதுவே நீங்கள் விரும்பிய இடமாக உள்ளது! நீங்கள் உங்கள் அடைவிடத்தை அடைந்திருக்கிறீர்கள், மற்றும் அது நீங்கள் கற்பனை செய்யக்கூடியதற்கும் அதிகமான அழகுடையதாக இருக்கிறது! கிறிஸ்துவின் இராஜ்யத்தில் உண்மையாக இருக்கும் குடிமக்களுக்கு, வாழ்வு என்பது "பயணமாக" உள்ளது,

மற்றும் மரணம் என்பது “மூலைக்கு திரும்புதலாக” உள்ளது.

பாக்கியங்களின் ஒரு பகுதி மற்றும் நிறைவான நிறைவேற்றம் பற்றிக் கருத்துத் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள்:

- “ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.’’ அவர்கள் இப்போது கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் (சபையின்) குடிமக்களாக முடியும், மற்றும் அவர்கள் பரலோகத்திலேயே நித்தியத்திற்காக முன்னெதிர்நோக்கி இருக்க முடியும்.
- “துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.” அவர்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதன் மூலம் இங்கு ஆறுதல்படுத்தப்படுகின்றனர். இனிவரும் வாழ்வில் அவர்கள் தேவனுடைய சமூகத்தில் ஆறுதல்படுத்தப்படுவார்கள்.
- ‘‘[தாழ்மை மற்றும்] சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.” அவர்கள் இந்த வாழ்வின் உண்மையான ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர், மற்றும் ஒருநாளிலே அவர்கள் “புதிய பூமியில்” (பரலோகத்தில்) குடியமர்வார்கள்.
- ‘‘நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.’’ பூமிக்குரிய இந்த வாழ்வில் அவர்கள் தேவனுடைய வசனத்தினாலும் தேவனுடைய அருளிரக்கமான கவனிப்பினாலும் வளமூட்டப் படுவார்கள். அடுத்த வாழ்வில் இவர்களின் ஆத்துமாக்கள் பரலோகத்தில் முற்றிலுமான திருப்தியை அறியும்.
- ‘‘இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.” இரக்கமுள்ளவர்கள் இங்கு தேவனிடத்தில் இருந்து இரக்கம் பெறுவார்கள் மற்றும் அதை சிலவேளைகளில் பிறரிடமிருந்து பெறுவார்கள். பரலோகத்தில் நித்திய இரட்சிப்பு என்பதே தெய்வீக இரக்கத்தின் மாபெரும் செயல்விளக்கமாக இருக்கும்.
- “இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.” அவர்கள் விசுவாசக் கண்களால் இப்போது தேவனைத் தரிசிப்பார்கள், ஆனால் பரலோகத்தில் அவர்கள் முகமுகமாக அவரைத் தரிசிப்பார்கள்.
- ‘‘சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.’’ அவர்கள் இன்றைய நாட்களில் தேவனுடைய குடும்பமாகிய சபையில், அவரது பிள்ளைகளாக இருக்கின்றனர். ஒருநாளிலே இந்த மகவுரிமையானது பரலோகத்தில் நிறைவுபெற்றிருக்கும்.
- ‘‘நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.” அவர்கள் கிறிஸ்துவினிமித்தம் துன்பப்படுத்தப்படுவதால்இப்போது அகமகிழ முடியும். பரலோகத்தில் அவர்களின் பலன் மிகுதியாயிருக்கும் என்று இயேசு வாக்குத்தத்தம் செய்துள்ள காரணத்தினால், அவர்கள் விசேஷித்த வகையில் அகமகிழ

முடியும்.

## முடிவுரை

E. ஸ்டேன்லி ஜோன்ஸ் என்பவர், "இந்த நவீன நாட்களில் மனிதர்களுக்கு, வாழ்வில் செயல்படும் தத்துவம் தேவைப்படுமளவிற்கு வேறு எதுவும் தேவைப்படுவதில்லை" என்று எழுதினார். பயணம் செய்யும் ஒரு கப்பலின் ஒப்புவமையைப் பயன்படுத்தி, நவீன மனிதன் ஒருகாலத்தில் தன்னைப் பாதுகாத்திருந்த கட்டும் கயிறுகளில் இருந்து தன்னைத் தளர்வாக்கித் துண்டித்துக் கொண்டுள்ளான் என்று ஜோன்ஸ் கருத்துத் தெரிவித்தார். அவன் தனது வரைபடம், தனது திசைகாட்டும் கருவி, தனது திருப்புச் சக்கரம் மற்றும் நிறைவான அடைவிடம் பற்றிய எந்தக் கருத்தையும் தனது வாழ்க்கைக் கப்பலில் இருந்து துக்கி எறிந்து விட்டான். அவன் தன்னையே, "சுதந்தரமானவன்!" என்று அறிவித்துக் கொண்டிருக்கிறான். மக்கள் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதால், அவர்கள் இன்றைய நாட்களில் "எல்லாவற்றிலிருந்தும் விடுதலை - பாறைகள், புயல்கள் மற்றும் வெறும் அர்த்தமற்ற உணர்வினால் ஒரு அலையிலிருந்து இன்னொரு அலைக்கு அலைக்கழிக்கப்படுதலினால் உண்டாகும் துன்புறுதலைக் சகிக்க இயலாத பித்துப்பிடித்த நிலை தவிர மற்ற எல்லாவற்றில் இருந்தும் - விடுதலை பெற்றிருக்கிறான்" என்று ஜோன்ஸ் முடிவு செய்தார்.[26] மலைப்பிரசங்கம், மக்களுக்கு மிகவும் தேவைப்படுகிறதான "செயல்படும் தத்துவத்தை" அளிக்க முடியும். இந்தப் பிரசங்கம் பாராட்டப்படுவதற்கான உயர்கொள்கை உடையதாக மாத்திரமே இருப்பதில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். இது நாம் நமது வாழ்வை அளந்துகொள்ள வேண்டிய தர அளவைகளை உடையதாக மாத்திரம் கூட இருப்பது இல்லை. இது கிறிஸ்து, தமது சீஷர்கள் *கீழ்ப்படிய வேண்டும்* என்று எதிர்பார்க்கும் (காண்க மத்தேயு 7:24-27) அவரது "ஜீவனும் வல்லமையும்" உள்ள வசனமாக இருக்கிறது (எபிரெயர் 4:12).

பிரசங்கத்தின் காட்சி அமைவிற்கு மறுபடியும் திரும்புங்கள். இயேசு அமர்ந்து போதித்துக் கொண்டிருக்கிறார். கற்றுக்கொண்டு அதைச் செயல்படுத்த விரும்பும் அவரது சீஷர்கள் அவரைச் சுற்றிலும் இருக்கின்றனர். அவர்களைச் சூழ்ந்து, கவனித்தல், பேரார்வம் மற்றும் ஒருவேளை திகைப்பும்கூடக் கொண்டிருந்த, ஆனால் தங்கள் மீது இந்தக் பிரசங்கம் சிறிதளவே செயல்விளைவை ஏற்படச் செய்த மக்களைக் கொண்ட திரள்கூட்டமும் இருக்கிறது. நீங்கள் இதில் எந்தக் குழுவில் இருக்கிறீர்கள்: சீஷர்களுடனா அல்லது மக்கள் கூட்டத்திலா? நீங்கள் மக்கள் கூட்டத்தில் இருந்தால், இந்தப்பாடத்தொடர் முடிவதற்குள் நீங்கள், இயேசு கிறிஸ்துவின் தேர்ந்தெடுக்கப்பட்ட சீஷர்களின் குழுவில் அங்கம் வகிக்க முடிவு செய்ய வேண்டும் என்று நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன்!

---

குறிப்புகள்

[1]Charles R. Erdman, *The Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1966), 53. [2]Jim Bill Mclnteer, "The Place, The People, The Preacher," *20th Century Christian* 23 (August 1961): 3. [3]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: InterVarsity Press, 1978), 15. [4]Erdman, 53. [5]கிறிஸ்து

*சிலுவையின் மீது மரிக்கும் வரையிலும் பழைய உடன்படிக்கை அமலில் இருந்து, மற்றும் இயேசுவின் மரணத்தில் புதிய உடன்படிக்கை அமலுக்கு வந்தது (காண்க கொலோசெயர் 2:14; எபிரெயர் 9:15-17).* [6]*பழைய ஏற்பாட்டுச் செயல்முறைகள் பற்றிய குறிப்புகளைப் புதிய ஏற்பாட்டு நடைமுறைகளுக்குத் தழுவி அமைத்தல் என்பது நமக்குச் சிரமமானதாக இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, "பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த" வருதல் (5:23) என்பது "தேவனை ஆராதிக்க வருதல்" என்பதற்குத் தோராயமாகச் சமமானதாக உள்ளது.* [7]Quoted in E. Stanley Jones, *The Christ of the Mount* (New York: Abingdon Press, 1931), 14. [8]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans, and rev. Joseph H. Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 454. [9]*இது மத்தேயு சுவிசேஷத்தில் "சீஷர்" அல்லது "சீஷர்கள்" என்ற வார்த்தை பயன்படுத்தப்படும் முதல் இடமாக உள்ளது.* [10]David Roper,*ரின் "கிறிஸ்துவின் வாழ்வு, 1"* Truth for Today *என்ற புத்தத்தைக் காணவும்* (Searcy, Ark.: Resource Publications, 2003), 218.

[11]*இந்தக் காட்சி அமைவின் வார்த்தைச் சித்தரிப்பு ஒன்று* "David Roper, The Day Jesus Taught on a Mountain," in "Narrative Preaching, 1," *Truth for Today* (February 1997): 26. *என்ற புத்தகத்தில் காணப்படுகிறது.* [12]A. Lukyn Williams, "St. Matthew," *The Pulpit Commentary,* vol. 15, ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 146. [13]Jack P. Lewis, *The Gospel According to Matthew, Part 1,* Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 78. [14]Harvey Scott, *The Sermon on the Mount* (Texarkana, Tex.: The Christian Helper, 1947), 3. [15]*பாக்கியங்கள் மீதான பாடத்தொடரை நீங்கள் போதித்து இருந்தீர்கள் என்றால், அந்தப் படிப்பை நீங்கள் பின்னோக்கிக் குறிப்பிடலாம்.* [16]*எடுத்துக்காட்டாக சங்கீதம் 1:2ஐக் காணவும். வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏழு பாக்கியங்கள் உள்ளன (1:3; 14:13; 16:15; 19:9; 20:6; 22:7, 14).* .[17]R. T. France, *The Gospel According to Matthew,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Inter-Varsity Press, 1985), 108. [18]*பின்வரும் பட்டியல் "பாக்கியங்கள்" என்ற புத்தகத்தில் அடையப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. அந்தப் படிப்பு, ஒவ்வொரு பாக்கியத்தைப் பற்றியும் கூறுபவற்றை நீங்கள் மறுகண்ணோட்டமிட விரும்பலாம்.* [19]Stott, 18. [20]Ibid., 19.

[21]*பின்தொடரும் நேர்மாறான கருத்துக்கள், டெக்ஸாஸின் ட்ரெண்ட் நகரில் உள்ள ட்ரெண்ட் கிறிஸ்துவின் சபையில் 2006ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதியன்று, காய் ரோப்பர் பிரசங்கித்த "மகிழ்ச்சியைக் கண்டுபிடிப்பது எப்படி?" என்ற பிரசங்கக் குறிப்புகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.* [22]Stoot, 18.[23]NASB *வேதாகமத்தில் இவ்வார்த்தையின் ஒரு வடிவம், 1 கொரிந்தியர் 7:40ல் "பாக்கியவதியாயிருப்பாள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [24]Ralph Sweet, *Moments on the Mount,* Living Word series (Austin, Tex.: R. B. Sweet Co., 1963), 17. [25]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 38. [26]Jones, 9.